# ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம்

**சங்கீதா**
*ஆய்வியல் நிறைஞர் (தமிழ்துறை)*
*சக்தி மகளிர் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

இறைவன் படைப்பில் ஆணும் பெண்ணும் இரு சமமான உயிர்களாவர். இரண்டு உயிரிகளும் மனித சமுதாயத்தை உருவாக்குகின்றன. மானுடத்தின் உயர்ந்த பண்புகளில் ஒன்று மனிதனை மனிதனாக மதிப்பது. ஆனால் ஆண் சமூகம் பெண்ணை சம உயிரியாகக் கூட மதிப்பதில்லை. பெண்கள் சந்தித்த வாழ்வியல் போராட்டங்கள் சமுகப் பிரச்சினைகளும் சமூக மறுப்புகளும் பெண்ணிய சிந்தனைகளாகத் தோன்ற காரணமாகின்றன. பெண்கள் வாழ்வில் பல்வேறு நிலைகளில் இடர்பாடுகள் நேர்ந்து வருவதை அறிய முடிகிறது. கல்வி, காதல், உரிமையின்மை, மண வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகள், வரதட்சிணை சிக்கல், பெண்கற்பு மற்றும் வலியுறுத்தல், விதவை நிலை முதலான சிக்கல் பெண்களுக்கு ஏற்படுகின்றன. பெண்களின் வாழ்வில் காணப்படும் இக்குறைபாடுகளை நீக்குவது சமுதாய மாற்றத்திற்கு உறுதுணையாக அமையும். இப்பிரச்சினைகளை பெண்ணியத் திறனாய்வு கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்ணியம்**

உலகம் தோன்றுவதற்கு அடிப்படை காரணியாக விளங்கியவள் பெண். அப்பெண்ணானவள் பிறரை சார்ந்தே வாழ்கிறாள். “பெமினிசம் என்ற சொல்லுக்கு, 1. பெண்ணின் தன்மைகள் 2. சமுகத்திலும் அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெற்றுத் தருவதற்கான கோட்பாடு. 3. பெண்களின் உரிமைக்காகவும் தேவைகளை நிறைவேற்றவும் பெண்கள் சார்பாக அகராதிகள் பல பொருள் விளக்கங்களை தருகின்றன”. அன்றும் “சமுகத்திலும் வேலைக் களத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் அடக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும், ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்து பட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கூறப்படுகிறது” என்பதை அறிஞர்களின் கூற்றுவழி அறியலாம். பெண்ணியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றால், பெண்ணியத்தின் மூன்று வகைகளை அறிந்து கொள்வது அவசியமாகும்.

பெண்ணியத்தை வளர்த்தெடுத்த பெண் விடுதலையை மையமாகக் கொண்ட சிந்தனையாளர்களையும், பெண்ணியவாதிகளையும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களையும் முதலில் அறிந்து கொள்வது தேவையாகிறது. ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட தொழில் ரீதியான வளர்ச்சிகளினூடே பெண்ணியம் பிறந்தது. தொழில் புரட்சியால் தோன்றிய மேற்கத்திய பெண்ணியம் பல்வேறு பரிமாணங்களுடன் மூன்று வகைகளை அறிமுகப்படுத்துகிறது. அதனை,

**தாராளவாதப் பெண்ணியம்**
**சோசலிசப் பெண்ணியம்**
**தீவரவாதப் பெண்ணியம்**

என்று மூன்று வகையான பெண்ணிய வகைகள் இடம் பெற்றுள்ளமை அறிய முடிகின்றது. பெண் பற்றிய சிந்தனையை அறிய முற்படும் போது “சமூகத்தில் பரம்பரையாக வழங்கி வந்த ஏற்றத் தாழ்வுகள், ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்புகள் யாவும் விவாதத்திற்குரிய பொருளாயின. இவை உண்மைக்கும் புறம்பானவையாகக் கருதப்பட்டு சமத்துவம், தனிமனித சுதந்திரம்', குடியாட்சி, எல்லோருக்கும் ஒரே நியதி என்ற சமூக மதிப்புகள் உருவாகத் தொடங்கின” என்று முத்துச்சிதம்பரம் கூறிய கருத்தை அடியொற்றி சமூகத்தில் பெண்களில் நிலையினை அறிய முடிகின்றது.

**ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம்**

இருபதாம் நூற்றாண்டு தமிழ் நாவல்களில் முக்கியமாக இடம்பெற்ற கரு பெண்ணியம் ஆகும் . பெண்கள் தன்னம்பிக்கையோடு தம் சொந்தக் காலில் நிற்பது தன் இழிவற்ற முன்னேறுவது,

வாழ்வின் தன் தேவைகளை உணர்த்துவது, பெண்களை இழிவுபடுத்தும் அனைத்தையும் புறக்கணிப்பது (ஆணும் பெண்ணும் சரி சமமா? பு.156) என அவ்வை பெண்ணியத்திற்கான வரையறைகளாக கூறுகின்றார். இன்றைய பெண் கவிஞர்களில் குறிப்பிடத் தக்கவர் ஆண்டாள் பிரியதா;ஷனி. இவருடைய புதினங்கள் பெரும்பாலும் பெண்களின் பிரச்சனைகளைப் பேசுகின்றது. இப்புதினங்களில் பெண்களைப் பற்றிய நான்கு விதமான பார்வை காணப்படுகிறது. 1.தாய்மை 2. ஆணாதிக்கச் சிந்தனை 3. பணிச்சுமை 4. பொருளாதார சிக்கல்

**தாய்மை**

பெண்கள் முழுமையடைவது தாய்மையில் தான். உயிர்களைப் பெற்று அன்போடு உருவாக்கும் மகளிர் பணி மேன்மையானது ஆகும். ஏழ்மையான குடும்பத்தில் வாக்கப்பட்ட முனியம்மா கணவனுக்கு நல்ல மனைவியாகவும் சின்னராசு, சம்பத், சுரேஸ், ராணி இவர்களுக்கு சிறந்த தாயகவும் விளங்கி சமுதாயத்தில் தாய் என்ற பெருமையை பெறுகின்றார். கணவனிடம் சேர்ந்து தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகின்றாள். பிள்ளைகளின் வாழ்க்கையில் சிறந்த முறையில் அக்கறை காட்டுகின்றாள். வறுமையினால் வாடும் தன் குடும்பத்தில் மகள் ராணி பருவம் அடைந்த மகிழ்ச்சியில் அவளுக்கு சடங்கு செய்ய வேண்டும் என நினைத்து கடன் வாங்கி சடங்கை முடிக்கும் போது சிறந்த தாயின் பெருமையை பெறுகின்றாள். தன் மூத்த மகன் சின்ராசு மேல் அக்கறை கொண்டு தீராத பகையில் இருக்கும் உறவுப் பெண்ணாண சின்னப் பொண்ணு தன் மருமகளாக வரவேண்டும் என நினைக்கிறாள். சின்ன மகன் சுரேசு வெட்டியான் தொழில் செய்த போது ஏற்பட்ட மயக்க நிலையில் மூச்சுப் பேச்சு இல்லாமல் இருக்கும் மகனைப் பார்த்து ஒப்பாரி வைத்து அழுது புலம்புகிறாள். ‘‘ஐயோ……. ஏம்புள்ளைக்குப் பேச்சில்ல ….சிரிப்பில்ல …… அம்மா ஆத்தா ..னு…… குரலில்ல அள்ளிவச்ச மண்ணாட்டம அப்படியே கெடக்கானே தள்ளிவச்ச கல்லாட்டம் தடுமாறிக் கெடக்கானே என்று மாரில் இடித்து அழுதாள். சுரேசைஇறுக்கிப் பிடித்து முட்டி அழுதாள். கண்ணீரும் மூக்கு சளியாய் முகத்திலிருந்து வழிய…… ஏழ்மைத்தாயின் பாசத்திற்கு வறுமை வரையறை போட முடியுமா? இவரின் வருத்தமோ அழுகையோ சுரேசுக்குப் புரியவில்லை (தகனம் பக். 91-92) இவற்றைப் பார்க்கும் போது முனியம்மா ஒரு சிறந்த தாயின் பெருமையைப் பெறுகின்றாள்.

**ஆணாதிக்கச் சிந்தனை**

இன்றைய சூழ்நிலையில் ஆணும் பெண்ணும் வேலைக்குச் சென்றால்தான் பொருளாதாரச் சிக்கலைச் சரிகட்ட முடியும். ஆண்களும் வேலைக்குப் போகும் பெண்களையே தேடித் திருமணம் செய்கின்றனர். பெண்கள் வேலைக்குச செல்லும் நிலையை ஏற்பவர்கள் ஒரு பக்கம் இருக்க , பெண்கள் வேலைக்குச் சென்றால் ஆண்களுக்கு வேலை கிடைக்காது என்றும் குடும்பத்தை சரிவர நடத்திச் செல்ல முடியாது என்று கூறும் மக்களும் இருக்கின்றனர். இதனை ‘‘தகனம்’’ புதினத்தில் பிணம் எரிக்கும் தொழில் செய்யும் சின்னப்பொண்ணுவை குறை பேசுவதன் மூலம் ஆசிரியர் காட்டியுள்ளார். ஆம்பலைப் பய்யனாலே பதறித் தூக்கிப் போடற வேலையை பொம்பல பண்ணிட்டானா அவ ஆம்பலையேதான். பெருஞ்சாதிப் பொம்பளையா இருக்கணும்…….ஆம்பலை காளைகளா இருந்தா சொகமாவா இருக்கும்? குடும்பம் நடத்த தோதுப்பட மாட்டாறுக…..என்ற வரிகள் ஆணாதிக்கச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.’’

**பணிச்சுமை**

‘‘சின்னவள் என்ற நாவலில் வரும் தாழிகா துணைப் பொறியாளர் பணியில் சேருகிறாள். மதியம் தொடங்கிய வேலை தொடர்ச்சியாக இரவு ஒன்றரை மணிக்கு ஒளிபரப்பு முடியும் வரை தொடர;கிறது. விடியோ டேப் ரிகார்டிங் அறையில் ஒளிபரப்புப் பணியில் ஈடுபடுகிறாள். தொடர்ச்சியாக திரைப்பட கேசட்டுகளை மாற்றி ஓட்டுகறாள். ‘‘நெக்ஸ்ட் லைன் ஏன்……….ரோல் லைன் ஏன்……இண்டர் களம் மூலம் கோட்டை சுழலவிட்டு தொடர்ச்சியாய் வேலை’’ என்று அவருடைய வேலைத் திறனும் பளுவும் வெளிப்படுத்தப் படுகிறது .

**பொருளாதாரச்சிக்கல்**

'வேடிக்கை மனிதர்கள்' நாவலின் கதைத் தலைவி சரஸ்வதி பள்ளி ஆசிரியராகப் பத்தாயிரம் சம்பாதிக்கிறாள். மாலை நேர சிறு ஓய்வையும், அவள் கணவன் விட்டுவைக்கவில்லை. டியூசன் எடுக்கிறாள். டியூசனால் ஆறாயிரம் சம்பாதிக்கிறாள். சுரஸ்வதி கணவரும் நாத்தனாரும் சம்பளம் முழுமையும் வாங்கிக் கொள்கின்றனர். பேருந்து பயணத்திற்கு மட்டுமே பணம் தருகின்றனர். சரஸ்வதியின் அம்மா அறுபத்து மூன்று வயதானவள். திருமணமான மூன்று வருடத்திலே கணவன் இறக்க டியூசன் எடுத்து தன் மகள் சரஸ்வதியைப் படிக்க வைத்து ஆசிரியர் ஆக்கியவர். இன்று அவர் யாருடைய ஆதரவும், இல்லாமல் அனாதையாக நிற்கிறாள். சரஸ்வதி அம்மாவிற்காக ஆயிரம் ருபாயாவது கொடுக்க ஆசைப்படுகின்றாள். நாத்தனார் சாரதா மறுத்தும் சரஸ்வதி தாயை இழிவுபடுத்தி பேசுவதை 'ஆசிரியர் சாரதாவின் கூற்று வாயிலாகவே பதிவு செய்கிறார்.

பிச்சைக்காரப் பொம்பலை திருவோடு தூக்கறவ கல்யாணத்துக்கு அப்புறம் பொண்ணுகிட்ட கையேந்துவாளா ஏந்தம்பி நீயே சொல்லு.. இத்தினி வயசுப் பொம்பளைக்கு ஆயிரம் ருபாய்க்கு என்ன தேவை? ம்! உன் பொண்டாட்டிகிட்ட சொல்லி வை சம்பளக் கவரை இனி மேல் என் கையில முழுசா' குடுத்தாகனும் சரியா?'' என்ற சாரதா கூற்று சரஸ்வதி மீது நடத்தப்படும் அடக்குமுறை தர்பாரை காட்டுகிறது". பொருளாதாரத்தில் பெண்களின் முன்னேற்றம் இருந்தாலும் குடும்பத்திலுள்ள மானுடர்களால் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகிறது.

**முடிவுரை**

பெண்ணியத்தின் பிரச்சினைகளை படைப்பாளி ஒவ்வொருவரும் தங்களின் நிலையிலிருந்து பல்வேறு கோணங்களில் உற்று நோக்கியும் படைத்தும் வந்திருக்கின்றனர். இவரின் படைப்பு சமுதாயத்தில் வேரோடிக் கிடக்கும் அடிமைத்தனத்தை மானுடத்திலிருந்து இனம் பிரித்துக் காட்டும் வன்மையைப் பெற்றிருக்கின்றன. இவரின் புதினங்களின் கருத்தோட்டமாக விளங்கும் பெண்ணியத்தின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளமுடிகின்றது.